DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 79/2025

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரன் | Father's/Husband's Name : | பெரியாண்டித்தேவர் |
| Village | : குமணன்தொழு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2026

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இந்த வழக்கில் 1ம் வாதி என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை அவர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொண்டார், அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு எனது பெயரில் ஆவணங்கள் உள்ளதா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். இந்த வழக்கில் வாதி தரப்பில் எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் **சாட்சி கேட்டும் கேள்விகளுக்கு சம்பந்தம் இல்லாத பதில்களை சொன்ன விஷயங்களையே திரும்ப திரும்பவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்.** தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்திருக்கிறேன்.

2) எங்கள் பெயரில் எந்த சர்வே எண்ணுக்கு வருவாய் ஆவணங்கள் இருக்கிறது என்றால் நத்தம் சர்வே எண்.1011. அந்த சர்வே எண் சம்பந்தமான ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ 8 ஆக தாக்கல் செய்துள்ள கணினி சிட்டா சர்வே எண்.1014/4 ற்குரியது என்றால் அந்த சொத்திற்கு மேற்கு பக்கம் எங்கள் சொத்து இருக்கிறது. எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை முருகன் பெயர் மாற்றம் செய்து வைத்திருக்கிறார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் வெள்ளிமலை சாலைக்கு மேற்கு பக்கம் நாங்கள் வீடு கட்டி குடியிருந்து வருவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

3) நான் சொல்வது போல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தை காட்ட எந்த வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தில் தற்போது குடியில்லை என்றும் அங்கு அமைத்திருந்த தகரம் மற்றும் மேற்கோப்புகளை அகற்றி தற்போது குமணன்தொழு பேட்டு தெருவில் வீடு கட்டி குடியிருந்து வருவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பேட்டு தெருவில் நாங்கள் குடியிருக்கும் வீடு அரசு தரப்பில் எங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் தான் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் பால்பாண்டிக்கும் அரசு தரப்பில் வேறு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இடங்களை எங்களுக்கு ஒதுக்கீடு செய்து சுமார் 30 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான்.

4) எங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் முதலில் வனத்துறைக்கு சொந்தமான இடமாக இருந்தது அதை அரசு கையகப்படுத்தி எங்கள் ஊரை சேர்ந்த 100 பேருக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்தது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் எனது அப்பா பெரியாண்டித்தேவருக்கும் ஒரு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் நாங்கள் வீடு கட்டியிருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனை அந்த ஒதுக்கீடு ஆணையில் சொல்லப்பட்டதால் அந்த இடத்தில் ஷெட் அமைத்து அனுபவத்தில் இருந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்திலும் வீடு இருந்தது. தாவா சொத்தில் வீடு இருந்ததற்கும், மின் இணைப்பு இருந்ததற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ள மின் இணைப்பு இரசீது நான் தற்போது அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் கட்டியுள்ள வீட்டிற்கானது என்று சொன்னால் சரியல்ல.

5) வா.சா.ஆ.2 மின் கட்டண இரசீது பேட்டு தெருவில் உள்ள வீட்டிற்குரியது தான் என்றாலும் இந்த வழக்கிற்காக தாவா சொத்திற்குரியது தான் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் அதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எங்களுக்கு பாத்தியமில்லாத சொத்திற்காக நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் சம்பந்தமாக இந்த வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நத்தம் சர்வே எண்.1011/3 ல் கட்டுப்பட்ட சொத்து எனது பெயரிலோ எனது

வகையறா பெயரிலோ இல்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணை பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.9, 10 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் தெற்கு மாலாக எங்களுடைய (வாதி) இடம்என்று குறிப்பிட்டு ரமேஷ் என்பவர் தானசெட்டில்மெண்ட் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ராசு மகன் ரமேஷ் எனது உறவினர் என்றால் சரிதான், சுற்றியுள்ள அனைவரும் எங்கள் உறவினர்கள். தெற்கு பக்க மாலில் எங்களுடைய இடம் இருந்தது என்பதை காட்ட வருவாய் ஆவணங்கள் எதுவும் வைத்து மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது உறவினர்களை வைத்து நான்குமாலை தவறாக குறிப்பிட்டு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் அந்த ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனது வழக்குரையில் நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் பிரதிவாதி எனக்கு எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும் அது சம்பந்தமாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் புகார் கொடுத்தற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7) பிரதிவாதி சர்வே எண்.1009/1A வில் அவருக்கு பாத்தியப்பட்ட 24 செண்ட் நிலத்தை அளப்பதற்காக எனக்கு அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை அளக்க வந்த போது நான் அளக்கவிடவில்லை. பின்னர் அந்த சொத்தை அளவீடு செய்த போது தான் எங்களுடைய இடம் இருப்பது எங்களுக்கு தெரியவந்தது என்றால் சரிதான். அதன்பிறகு அளந்து கல் ஊன்றிய பிறகு பொதுவான ஆட்களை வைத்து பேச்சு வார்த்தை நடத்தி கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு இன்று வரை அந்த பேச்சு வார்த்தை நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். நான்சொல்வது போல் பிரதிவாதி எனக்கு இடைஞ்சல் செய்யவில்லை என்றாலும் பிரதிவாதியின் இடத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது பெயரில் தான் இருந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கில் முன்னுக்கு பின் முரணாக பதில் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8) பிரதிவாதியின் நிலத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் உலகமரம், தென்னை மரங்கள் சர்வே எண்.1009/1 A வில் தான் இருக்கிறது என்றாலும் அந்த சர்வே எண் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் சொல்வது போல் எந்த மரமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 8 வரையுள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.1009/1A பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 17.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.04.17 17:01:43 +0530

District Munsif,
Aundipatti.